இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

(தொலைத் தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு)

கொரிய மொழிப் பரீட்சை அறிவித்தல்

கணனி சார்ந்த பரீட்சை (CBT – Computer Based Test)

கொரியக் குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு (MOU) ஒப்பந்தத்தின் பிரகாரம் தங்கியிருப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்டுள்ள கால எல்லையினுள் சுய விருப்பத்தின் பேரில் இந்நாட்டிற்கு வந்து மீண்டும் கொரியாவிற்கு தொழிலுக்காக செல்வதற்கு விரும்பும் தொழிலாளர்கள் தொடர்பாகவான விசேட கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சை (SPECIAL EPS-TOPIK) பின்வரும் வகையில் இலங்கையில் நடாத்தப்படும்.

கொரிய குடியரசில் தொழில் புரிவதற்கு எதிர்பார்க்கும் தொழில் அபேட்சகர்கள் கொரியாவின் மனிதவள திணைக்களத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இந்தப் பரீட்சையில் சித்தியடையும் நபர்கள் மட்டுமே தொழில் அனுமதிப்பத்திர முறையின் கீழ் **(EPS)** விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

2019 பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி

கண்காணிப்பு : தொழில் வாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு, கொரியா

நிர்வாகம் : கொரிய மனித வள அபிவிருத்தி நிறுவனம்

ஒத்துழைப்பு : வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

01. பரீட்சை நேர அட்டவணை

பதிவு செய்யும் கால எல்லை	பரீட்சைத் திகதியை அறிவித்தல்	பரீட்சைக் காலம்	பெறுபேறு அறிவித்தல்	வயதெல்லை
மார்ச் 14 முதல் மார்ச் 16 வரை	ஏப்ரல் 08	ஏப்ரல் 23 முதல்	மே 13	1979 மார்ச் 15 முதல் 2001 மார்ச் 14 வரை

* தொழில் அனுமதிப்பத்திர முறையின் தன்மைக்கமைய இந்த நேர அட்டவணை மாற்றமடையலாம்.

02. (அனுமதிக்கப்பட்ட) கைத்தொழில் வகைகள் - உற்பத்தி, விவசாயம் / விலங்கு வளம், நிர்மாணம், கடற்றொழில் மற்றும் சேவை துறைகள்

* விண்ணப்பதாரர் தாம் தாய் நாட்டிற்கு வருவதற்கு முன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் இறுதியாக தொழில் செய்த இடத்தையே சிபாரிசு செய்து கொள்வதற்குத் தேவையாயின் அவர் / அவள் விண்ணப்பிக்கையில் குறித்த துறையையே தெரிவு செய்வதற்கு மிகுந்த கவனத்துடன் இருத்தல் வேண்டும்.

03. பரீட்சையில் சித்தியடையச் செய்ய உத்தேசித்துள்ள எண்ணிக்கை - அறிவிக்கப்படவுள்ளது.

❍ பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களுக்கிடையில் தொழில் துறையை கவனத்திற் கொள்ளாமல் மொத்தப் புள்ளியான 200 புள்ளிகளில் 95 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுக்கிடையில் கூடிய புள்ளி மட்டத்திற்கமைய சித்தியடைபவர்கள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

04. பரீட்சை திகதி மற்றும் இடத்தை அறிவித்தல்

❍ பரீட்சை இடம் - கணனி சார்புடைய பரீட்சை (CBT பரீட்சை நிலையம்) இல. 205, தெபானம, பன்னிப்பிட்டிய.

❍ அறிவிக்கப்படும் முறை

- EPS – TOPIK இணையதளம். **(http://www.epstopik.hrdkorea.or.kr)**
- பணியகத்தின் இணையதளத்தில்: (**http://www.slbfe.lk)**

05. தகைமைகள்

❍ அடிப்படை ஒப்பந்தத்தின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கால எல்லையினுள் சுய விருப்பத்தின் பேரில் (2010-01-01ஆம் திகதியின் பின்) இந்நாட்டிற்கு வருகை தந்துள்ள தொழிலாளர்கள்

❍ விண்ணப்பதாரர் 18 வயது முதல் 39 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். (1979 மார்ச் 15 முதல் 2001 மார்ச் 14 வரையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்)

❍ விண்ணப்பதாரர் சிறைவாசம் அல்லது கடுமையான தண்டனையொன்றைப் பெற்றவராக இருத்தல் ஆகாது.

❍ விண்ணப்பதாரர் கொரியக் குடியரசினால் வெளியேற்றப்பட்டவராகவோ அல்லது வெளியேறும் படி அறிவித்தல் விடுக்கப்பட்டவராகவோ இருத்தல் ஆகாது. கொரியாவில் சட்டவிரோதமாக ஒரு நாளேனும் தங்கியிருத்தல் ஆகாது.

❍ விண்ணப்பதாரர் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு தடை செய்யப்பட்டவராக இருத்தல் ஆகாது.

❍ E-9 விசா வகுதி மற்றும் E-10 விசா வகுதி எனும் இரண்டு விசா வகுதியின் கீழான சேவைக் காலத்தினுள் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலம் தென் கொரியாவில் சேவையாற்றியிராத நபராக இருத்தல் வேண்டும்.

❍ யாராவது நபரொருவர் 2017 நவம்பர் மாதம் குடிவரவு கட்டுப்பாட்டுச் சட்டம் திருத்தம் செய்வதற்கு முன் இந்நாட்டிற்கு திரும்பி வந்திருந்தால் அந்நபர் 05 வருட காலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் கொரியாவில் இருக்கையில் அந்த நபரின் பெயர் இந்தப் பரீட்சைக்காக தகைமை பெறுபவர்களின் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். அவ்வாறாயின் அந்நபர் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகைமையைப் பெறமாட்டார்.

06. விண்ணப்பப் படிவம் (பிரவேசப் பத்திரம்) பதிவு செய்தல்

❍ **கால எல்லை:-** 2019 மார்ச் 14ஆம் திகதி முதல் 2019 மார்ச் 16ஆம் திகதி வரை (03 நாட்கள்)

❍ **பதிவு செய்யப்படும் இடம்**: கேட்போர் கூடம், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், இல. 234, கொஸ்வத்த, பத்தரமுல்ல.

❍ **பதிவு செய்யும் முறை** – தனிப்பட்ட வகையில் வருகை தந்து பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

❍ உங்களது பிறந்த திகதியை குறித்த முறைமையின் ஊடாக பணியகத்தின் இணைய தளத்திற்குப் பிரவேசிப்பதன் மூலம் நீங்கள் இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள தகுதியானவரா என்பதை பரீட்சித்துப் பார்க்கலாம். (http://www.slbfe.lk)

❍ **தேவையான ஆவணங்கள்**

- இந்நாட்டிற்கு வருவதற்கு பயன்படுத்திய வெளிநாட்டுக் கடவுச் சீட்டின் பிரதி (அவர் / அவள் இந்நாட்டிற்கு சுய விருப்பத்தின் பேரில் வருகை தந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக)
- விண்ணப்பப்படிவம் (பதிவு செய்யப்படும் இடத்தில் வழங்கப்படும் - பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

❖ விண்ணப்பப் படிவ இலக்கம் சகல விண்ணப்பங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிம் நிரப்பப்படும் போது ஏதாவது பிழைகள் ஏற்பட்டால் அழிக்கும் மை (டிபெக்ஸ்) பாவித்து சரிசெய்து ஒப்படைத்தல் வேண்டும்.

- கடவுச் சீட்டு அல்லது 75% சிறிதாக்கப்பட்ட கடவுச் சீட்டின் பிரதி (தற்போது பாவிக்கப்படும் கடவுச் சீட்டிற்கு அமைய, எதிர்வரும் ஒரு வருடம் மற்றும் ஆறு மாத காலத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும்.)

❖ தமது கடவுச் சீட்டின் பிரதியொன்று விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- 3.5 செ.மீ x 4.5 செ.மீ. அளவிலான தெளிவான வர்ண புகைப்படங்கள் இரண்டு. (03 மாதத்திற்குள் எடுக்கப்பட்டது)

❖ விண்ணப்பதாரரினால் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படும் தனிப்பட்ட தகவல்கள் கடவுச் சீட்டில் காணப்படும் தகவல்களை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அவ்வாறு ஒத்ததாக இல்லாவிடின் அவருக்கு கொரிய நாட்டிற்குள் நுழைய முடியாது போகும். தகவல்கள் தொடர்பிலான வேறுபாடுகளுக்கு விண்ணப்பதாரரே முழுமையாக பொறுப்புக் கூறல் வேண்டும். அதனால் பதிவு செய்வதற்கு வரும் போது விண்ணப்பதாரர் தமது வெளிநாட்டுக் கடவுச்சீட்டை கையோடு கொண்டு வருதல் கட்டாயமாகும்.

❖ விண்ணப்பதாரரினால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் பெயர், பிறந்த திகதி, பால் மற்றும் புகைப்படம் என்பன கொரிய வேலை வாய்ப்பை வழங்கும்போது உபயோகப்படுத்துவதனால் அத்தகவல்கள் கடவுச் சீட்டில் காணப்படும் தகவல்களை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அத்தகவல்களை பின்னர் எவ்வகையிலும் மாற்றம் செய்ய முடியாது.

❍ **பரீட்சைக் கட்டணம் -** 24 அமெரிக்க டொலர்களாகும். பரீட்சைக்காக பதிவு செய்யப்படும் தினத்தில் வெளிநாட்டு நாணயமாற்றுக்கு அமைவாக இலங்கைப் பணத்தில் (4285.00 ரூபா) செலுத்துதல் வேண்டும்.

❍ யாராவது ஒரு விண்ணப்பதாரர் தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போனால் அவர் / அவளது பரீட்சைக் கட்டணத்தை பதிவுக் காலத்தினுள் மீளப் பெற்றுக் கொள்ள முடியும். (எவ்வாறாயினும் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் பதிவு செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

❍ பதிவு செய்தலானது விண்ணப்பதாரர் சமுகம் தரும் கிரம முறைக்கமைய இடம்பெறும். விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மேலதிக பரீட்சைத் தினத்தை தீர்மானம் செய்தல் மற்றும் பரீட்சையை நடாத்துதல் என்பன இடம்பெறும். பரீட்சை நடாத்தப்படுவது பற்றி அறிவித்தல் செய்யப்படும் திகதி, ஒவ்வொரு விண்ணப்பதாரருக்குரிய பரீட்சை நிலையம், பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய திகதி மற்றும் நேரம் என்பவற்றை www.slbfe.lk எனும் இணையதளத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

கொரிய மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்படும் தமது நாட்டிற்குத் திரும்பி வரும் தொழிலாளர்களுக்கான உதவிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொள்வதனால் கிடைக்கும் நன்மைகள்

வருடம்	கொரிய மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்படும் மீள் குடியேற்ற உதவி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (அதிகூடிய புள்ளிகள் 25)		
	கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சையின் 3ஆம் மட்டத்திற்கான கற்கை நெறி (அதிகூடிய புள்ளிகள் 20)		தொழிலுக்கான தொழிற்றிறன் பயிற்சி/ வியாபாரத்தை ஆரம்பித்தல் (அதிகூடிய புள்ளிகள் 05)
	பூர்த்தி செய்தல்	கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சையின் 3ஆம் மட்டத்திற்கு இயைபான பயிற்சி அல்லது அதற்கு மேலுள்ளவர்கள்	பூர்த்தி செய்தல்
2016	-	மேலதிக புள்ளிகள் (20 புள்ளிகள்) பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.	மேலதிக புள்ளிகள் (5 புள்ளிகள்) பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
2017இன் பின்	மேலதிக புள்ளிகள் (5 புள்ளிகள்) பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.		

❖ கொரியாவில் நடாத்தப்படும் மீண்டும் தமது நாட்டிற்கு வருகை தரும் தொழிலாளர்களுக்கான உதவிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ள நீங்கள், குறித்த சான்றிதழை இத்துடன் உள்ள இணைப்பின் பிரகாரம் குறித்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து இணைத்தல் வேண்டும். (இணைப்பின் பிரகாரம் அனுப்பவும்)

❖ கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையின் 3வது மட்டம் அல்லது அதற்கு மேலுள்ளவர்கள் அச்சான்றிதழை மட்டுமன்றி கொரிய கல்விச் செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழையும் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

07. பரீட்சை சாராம்சம்: 2019 ஏப்ரல் 23ஆம் திகதி முதல்

❍ பரீட்சைத் தயாரிப்பு மற்றும் தேர்வு முறை

வினாக்களின் மாதிரி	வினாக்களின் எண்ணிக்கை	மொத்தப் புள்ளிகள்	காலம்
வாசித்தல்	20	100	25 நிமிடங்கள்
செவிமடுத்தல்	20	100	25 நிமிடங்கள்
மொத்தப் புள்ளிகள்	40	200	50 நிமிடங்கள்

❍ பரீட்சைக் காலம்

பரீட்சை அமர்வுகள்	பரீட்சைக்கான வசதிகள் வழங்கும் கூட்டம்	விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தல்	காலம்	
			வாசிப்பு (25 நிமிடங்கள்)	செவிமடுத்தல் (25 நிமிடங்கள்)
1ஆம் அமர்வு	09.20 – 9.30	09.30 – 10.00	10.00 – 10.25	10.25 – 10.50
2ஆம் அமர்வு	10.50 – 11.00	11.00 – 11.30	11.30 – 11.55	11.55 – 12.20
3ஆம் அமர்வு	13.20 – 13.30	13.30 – 14.00	14.00 – 14.25	14.25 – 14.50
4ஆம் அமர்வு	14.50 – 15.00	15.00 – 15.30	15.30 – 15.55	15.55 – 16.20

சகல பரீட்சார்த்திகளும் அறிவுறுத்தல் நேரத்திற்கு முன் பரீட்சை மண்டபத்தினுள் இருத்தல் வேண்டும்.

❍ **பரீட்சைக் கட்டமைப்பு மற்றும் சித்தியடையச் செய்யும் விதிமுறை**

- பல்தேர்வு வினாப் பத்திரம்
- இடைவேளையின்றி செவிமடுத்தல் மற்றும் வாசித்தல் பரீட்சை நடைபெறும்.

❍ சகல **வினாக்களும் கொரிய மொழித் தேர்ச்சி பரீட்சைக்கான பாட விதானத்திற்கமைய தயாரிக்கப்படும்.**

❖ பரீட்சை நாளில் கொண்டுவர வேண்டியவைகள்:

- அனுமதிப் பத்திரத்தின் விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட பகுதி
- செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு

(பரீட்சை அனுமதிப் பத்திரத்திற்கு உபயோகப்படுத்திய வெளிநாட்டுக் கடவுச் சீட்டாக இருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் **கடவுச்சீட்டு அல்லாத எந்தவொரு விண்ணப்பதாரரும் பரீட்சைக்குத் தோற்ற முடியாது)**

08. பரீட்சைப் பெறுபேறுகளை அறிவித்தல்

❍ திகதி: 2019 மே 13

❍ தெரிவிக்கும் முறை

▪ இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் இணைய தளம் (http://www.slbfe.lk)

▪ கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சை இணைய தளம் (http://www.epstopik.hrdkorea.or.kr)

▪ கொரிய தொழில்வாய்ப்பு தொடர்பான இணைய தளம் http://www. eps.go.kr

❖ பெறுபேறுகள் செல்லுபடியாகும் கால எல்லை - இரண்டு வருடங்கள் (பெறுபேறுகள் வெளியாகிய நாள் முதல் இரண்டு வருட கால எல்லை)

09. ஏனைய தகவல்கள்

❍ விண்ணப்பதாரர் சுய விருப்பத்தின் பேரில் இந்நாட்டிற்கு வராதவர் என நிரூபணமானால் அவர் பரீட்சையில் சித்தியடைந்தாலும் அவரது பரீட்சை பெறுபேறுகள் இரத்துச் செய்யப்பட்டதாக கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் அது தொடர்பான சகல பொறுப்புக்களும் விண்ணப்பதாரருடையதாகும்.

❍ சித்தியடையும் விண்ணப்பதாரர் முன் வெளிநாட்டுப் பயிற்சியிலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதுடன் குறுகிய கால மீள் நுழைதல் விதிமுறை மற்றும் உடனடி தொழில் பதிவுக்கான தகைமையைப் பெறுவர்.

❍ பரீட்சை நடைபெறும் நாட்களில் மோசடி செய்வதற்காக பாவிக்கக்கூடிய கையடக்கத் தொலைபேசி, கெசட் உபகரணம், MP3, PDA போன்ற இலத்திரனியல் கேட்டல் உபகரணங்களை பரீட்சை நிலையத்திற்குள் கொண்டு வருதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

❍ யாராவது விண்ணப்பதாரரால் பரீட்சை நடைபெறும் வேளையில் அவ்வாறான உபகரணங்களை உபயோகப்படுத்தினால் அவரது பெறுபேறுகள் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் 03 வருடத்திற்கான பரீட்சைத் தடையும் விதிக்கப்படும்.

❍ விண்ணப்பதாரரின் வெளிநாட்டுக் கடவுச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர், பிறந்த திகதி, பால் போன்ற தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அவரால் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகவல்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுதல் கொரிய தொழில் இணைய தளத்தில் பதிவு செய்தல் மற்றும் கொரியாவிற்குள் பிரவேசித்தலை நிராகரிப்பதற்கு காரணமாக அமையலாம் என்பதால் அவ்வாறான வேறுபாடுகள் தொடர்பில் முழுமையான பொறுப்பு விண்ணப்பதாரருடையதாகும்.

❍ கொரிய மொழி தேர்ச்சியில் திறமையாக மேன்மையுற சகல பல்தேர்வு வினாக்களை மொழித் தேர்ச்சி பரீட்சைக்காக சிபாரிசு செய்யப்பட்ட புத்தகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குரித்தான பாட விதான புத்தகம் கீழே தரப்பட்டுள்ளதென்பதுடன் விண்ணப்பதாரர்கள் பின்வரும் இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.

(பாடவிதானங்களை பதிவிறக்கம் செய்யக்கூடிய இணையதளம்)

இலக்கம்	உள்ளடக்கம்	இணையதளம்
HRD Korea இணையதளத்தின் முதல் பக்கம்	Textbook file (-PDF, Sound Source)	http://www.hrdkorea.or.kr/3/3/3/1/2
EPS-TOPIK இணையதளத்தின் முதல் பக்கம்	Textbook file (-PDF, Sound Source)	http://esptopik.hrdkorea.or.kr

கொரிய மொழி பரீட்சையில் சித்தியடைதல் கொரிய நாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான சான்றாக அமையாது என்பதுடன் உங்களது வேலை வாய்ப்பு விண்ணப்பப் படிவம் பதிவு செய்து கொள்வதற்கு தகுதியானதா என்பது மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும்.

➢ மருத்துவ பரிசோதனையில் சித்தியடையாதோர் அல்லது கொரியாவில் சட்ட விரோதமாக சேவை செய்துள்ள விண்ணப்பதாரர் கொரிய வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பம் செய்வதற்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள். அவ்வாறே E-9 விசாவுக்கான தேர்வுமுறைகளை பூர்த்தி செய்திராதவர்களும் கொரிய நாட்டில் வேலை செய்ய முடியாது.

➢ தென் கொரியக் குடியரசின் வேலை வாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு மாத்திரமே தென் கொரியாவிற்கு இலங்கையர்களை அனுப்புவதற்கான சட்டபூர்வமான அதிகாரம் உள்ளது.

➢ கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மூலம் கொரிய தொழில்வாய்ப்பு இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே கொரிய அரசின் வேலை கொள்வோரால் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

➢ வேறெந்த தனியார் பிரிவும் கொரியாவிற்கு வேலை வாய்ப்பிற்கு அனுப்பும் முறையில் தலையிடுவாராயின் அவ்வாறான செயற்பாட்டுக்கு அவருக்கு சட்டரீதியான தண்டனை வழங்கப்படும்.

➢ குறித்த விண்ணப்பப் படிவத்தை பதிவு செய்வதற்காக - 24 அமெரிக்க டொலர்கள் (4,285.00 ரூபா) மட்டுமே விண்ணப்பதாரரால் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக வேறெந்த தரப்பினருக்கும் எந்தவிதமான கொடுப்பனவுகளும் செலுத்தப்படல் ஆகாது என்பது மேலும் அறியத்தரப்படுகிறது. அவ்வாறே தொழில் அனுமதிப்பத்திர முறையின் கீழ் கொரியாவில் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது அது சம்பந்தமாக எந்தவொரு விடயத்திற்காகவும் எந்தவொரு மோசடி தரப்பினரிடமும் அகப்பட வேண்டாமென அறிவிக்கப்படுகிறது.

☐ விண்ணப்பதாரரின் பிரகடனம்

EPS-TOPIK பரீட்சைக்காக பதிவு செய்து கொள்வதற்கு என்னால் சமர்ப்பிக்கப்படும் தொழிலாளர்கள் மீண்டும் தமது நாட்டுக்கு வருவதற்காக வழங்கப்படும் உதவிப் பயிற்சி மற்றும் கல்வி தொடர்பான ஆவணம் மோசடியானது என்றால் அது தொடர்பிலான சகல சட்டபூர்வமான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன் என இத்தால் சத்தியம் செய்து பிரகடனப்படுத்துகிறேன்.

❖ விண்ணப்பதாரரின் மேற்படி ஆவணம் பொய்யானது என உறுதியானால் பரீட்சைப் பெறுபேறுகள் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் 03 வருட காலம் கடக்கும் வரையில் குறித்த நபர் இந்த EPS-TOPIK பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

விண்ணப்பதாரரினால் பூர்த்தி செய்ய வேண்டியது

பெயர்		பதிவிலக்கம்	
பிறந்த திகதி		வெளிநாட்டுக் கடவுச்சீட்டு இல.	
பால்		தொலைபேசி இலக்கம்	

☐ மீண்டும் தமது நாட்டுக்கு வருகை தரும் தொழிலாளர்களுக்காக நடாத்தப்படும் பயிற்சி * அடையாளமிடவும் (●) தகுதிகள்

கொரிய கல்விச் செயற்பாடுகள் (அதிகூடிய புள்ளிகள் 20)	கொரிய கல்விச் செயற்பாடுகளை பூர்த்தி செய்துள்ளவர்களுக்கான பயிற்சி (0) < 2016ஆம் வருடத்தில் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கு ஏற்புடையதல்ல >
	கொரிய மொழி பரீட்சையில் 3ஆம் மட்டத்தைப் பூர்த்தி செய்துள்ள அல்லது அதற்கு மேல் பூர்த்தி செய்ததன் பின் கொரிய கல்விச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்தல் (0)
தொழில் மற்றும் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான தொழில்சார் பயிற்சி (அதிகூடிய புள்ளிகள் 05)	தொழில் செய்வதற்கான தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்தல் (0)

20...../...../..... (வருடம்/மாதம்/திகதி)

பெயர்..... (கையொப்பம்)

தலைவர், கொரிய மனிதவள நிறுவனம்

தவிசாளர்,

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்,

234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,

கொஸ்வத்தை, பத்தரமுல்லை.